**SC.No.01/2020**

**நாள்.. 25.11**.2021

**அ.சா.1– விக்னேஷ்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு முன் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்.

<u>முன் விசாரணை தொடர்ச்சி</u> –

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.15,000/– என்னிடம் காட்டப்படுவதுதான். அது சா.பொ.1. அதன் பிறகு வரிச்சியூர் மெயின் ரோடு அருகில் உள்ள நியாய விலைக்கடைக்கு கிழக்குச்சுவருக்கு அருகே இவ்வழக்கில் இறந்துபோன அருண்குமார் பிரேதத்தை போட்ட இடத்தை 1ம் எதிரி சரவணன் அடையாளம் காட்டினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW-8** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயக்குமார் |
| Father/Husband Name | : | **செல்லம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2021

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் இளங்கோவடிகள் தெருவில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி தொழில் செய்கிறேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பு நானும், எனது அண்ணன் தினகரனும் ஆட்டோவில் போகும்போது இராநாதபுரம் ரோமன் சர்ச் பெட்ரோல் பல்க் அருகில் பஜார் கா.நி.ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் நானும், தினகரனும் கையெழுத்து செய்தோம். பார்வை மகசர் அ.சா.ஆ–6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்னிடம் கையெழுத்து எதையும் வாங்கவில்லை என்றும் நான் ஆட்டோ ஓட்டுவதால் போலிசாரின் தயவு தேவை என்பதால் போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW-9** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | பிரசாத் |
| Father/Husband Name | : | சாதுசேகரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2021

முதல் விசாரணை–

நான் மதுரை அய்யர் பங்களா பாமா நகரில் வசித்து வருகிறேன். நான் மதுரையில் அமிர்தா ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் Sales Executive ஆக வேலை பார்க்கிறேன். 2014 ம் ஆண்டு திருப்புவனம் தாலுகா மணலூர் கிராமம் ஜெயபாரத் ஹோம்ஸ் மெட்ரோ சிட்டி பிரைவேட் லிமிடெட்டில் Sales Executive ஆக வேலை பார்த்தபோது அங்கு 1ம் எதிரி சரவணன் ரூ.40,000/–அட்வான்ஸ் கொடுத்து மாத வாடகை ரூ.4,000/–க்கு கதவு எண். A06 வீட்டில் வாடகைக்கு பேசி குடியிருந்தார். அந்த வீட்டிற்கு அவர் காரில் வருவார், போவார். நான் கடைசியாக சரவணனை 12.12.2014ம் தேதி வெள்ளை கலர் சட்டையுடன் இருந்த ஒரு நபரை கூட்டிக்கொண்டு வீட்டிற்கு சென்றதை நான் பார்த்தேன். அதன் பின்னர் சரவணனுடன் வந்த அந்த நபர் இறந்துவிட்டதாக போலிசார்

என்னிடம் சொன்னதை வைத்துதெரிந்து கொண்டேன். அந்த நபர் வரிச்சியூரில் நியாயவிலைக் கடை அருகில் இறந்து கிடந்தததாக கேள்விப்பட்டேன். 1ம் எதிரி சரவணன் என்பவரை எனக்கு நன்றாக தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் என்னால் அவரை அடையாளம் காட்டமுடியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

இறந்த நபரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். இறந்த நபர்தான் சரவணனுடன் அபார்ட்மெண்டுக்கு வந்தாரா என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 01/2020** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW-10** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | விமலா தீத்தன் |
| Father/Husband Name | : | சிதம்பரம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2021

முதல் விசாரணை–

நான் மதுரை பி.பி–சாவடியில் பாரதியார் நகர் 2–வது தெருவில் வசித்து வருகிறேன். நான் தற்போது மதுரையில் மதர் இந்தியா ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் பொறியாளராக வேலை பார்க்கிறேன். இதற்கு முன்பு 5 வருடங்களுக்கு முன்பு நான் திருப்புவனம் தாலுகா மணலூர் கிராமம் ஜெயபாரத் ஹோம்ஸ் மெட்ரோ சிட்டி பிரைவேட் லிமிடெட்டில் பொறியாளராக வேலை பார்த்தபோது திடீரென்று ஒரு நாள் மாலையில் போலிசார் வந்தார்கள். நாங்கள் வேலை முடிந்து காவலாளிகளிடம் கேட்டபோது A6 வீட்டில் தங்கியிருந்த நபர் வீட்டில் ஒரு கொலை நடந்ததாக சொன்னார்கள். அந்த வீட்டில் குடியிருந்த நபர் பெயர் சரவணன் என்பதையும், அவர் ஒரு நபரை A6 வீட்டில் வைத்து கொலை செய்து விட்டதாக காவலாளிகள் என்னிடம் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

சரவணன் என்ற நபரை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். சரவணனுடன் யார் யார் அபார்ட்மெண்டுக்கு வந்து போவார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அந்த சமயத்தில் சரவணனையோ அல்லது அவருடன் வந்த நபரையோ நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.